ISSN - 2235-9796

12 பக்கங்கள் 30/-


# Valai வலை

சமகால பொது அறிவுத் தொகுப்பு

உண்மை
நேர்மை
நம்பிக்கையே
உயர்ச்சி தரும்

சிலந்தி - 04 | மே - 2015 | இழை - 44


**வாசக நெஞ்சங்களுக்கு...!**




நோர்வே 02

வலையின் இதழ் 44ஆவது இழையில், உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எப்படி சௌக்கியமாக இருக்கிறீர்களா?


உங்களது உழைப்பு சரியான விளைவை உருவாக்க வேண்டுமெனில், ஒரு பணியைத் தொடங்கும் முன்பாகவே, அதனை உங்கள் மனதிற்குள் பயிற்சி செய்து நிறைவேற்றுவது ஒரு மிகச் சிறந்த உத்தியாகும்.



மோவெதர் 08

குறித்த பணியைச் செய்வதில் உள்ள சிக்கல்கள், சவால்கள் போன்றவற்றை முன்கூட்டியே எதிர்பார்த்து நெளிவு சுளிவுகளுடன் தேவைப்படும் ஆற்றல்களுடனும் செயற்படுவதற்கு இதைவிடச் சிறந்த வழி இருக்க முடியாது.

புகழ்பெற்ற விளையாட்டு வீரர்கள், படைப்பாளிகள், நடிகர்கள் அனைவருமே தாங்கள் களத்தில் இறங்குவதற்கு முன்னராக தமது மொத்தச் செயற்பாட்டையும் மனத்திரையில் பயிற்சி செய்கிறார்கள். பின்னர் களத்தில் திரும்பத் திரும்ப பயிற்சி செய்து தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்கிறார்கள்.




சீர்திருத்தம் 09

100 சதவீதம் ஈடுபாட்டுடன் உழைத்தால் வெற்றி கிடைக்கும் என்ற நிலை இருந்தால் நீங்கள் 110 சதம் ஈடுபாட்டுடன் கடினமாக உழைக்க வேண்டும். அத்துடன் மனற நம்பிக்கை அத்துடன் இறை நம்பிக்கையும் கூடவே இருக்க வேண்டும்.

இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது.

எனவே உங்கள் ஆதரவில்

எனது பணி தொடரும்...

- 'வலை' வீசல் தொடரும்...

நன்றி.

சி.என்.எச்.சாள்ஸ்
தொகுப்பாசிரியர்

## இம்மாத சர்வதேச தினங்கள்...




- மே - 01 - உலக தொழிலாளர் தினம்
- மே - 02 - உலக சக்தி தினம்
- மே - 03 - உலக ஆஸ்துமா தினம்
  - உலக பத்திரிகை சுதந்திர தினம்
- மே - 08 - உலக செஞ்சிலுவை தினம்
  - உலக நூதனசாலை தினம்
- மே - 10 - உலக அன்னையர் தினம்
- மே - 11 - உலக தொழில்நுட்ப தினம்
- மே - 12 - உலக செவிலியர் / தாதியர் தினம்
- மே - 15 - உலக குடும்ப தினம்
- மே - 17 - உலக தொடர்பாடல் தினம்
- மே - 24 - உலக கொமன்வெல்த் தினம்
- மே - 29 - உலக தம்பதியர் தினம்
- மே - 31 - உலக புகையிலை மறுப்பு தினம்

## இலங்கை பற்றிய இம்மாத வலை வீசலில்...

❒ இந்த வருட வெசாக் தினத்தினை முன்னிட்டு நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளிலிருந்து எத்தனை சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்?
ஆயிரத்து 400 பேர்

❒ இலங்கையில் நோர்வேயின் சமாதான முயற்சி பற்றிய நூல் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் வெளியிடப்படவுள்ளது. அந்த நூலின் பெயர் மற்றும் ஆசிரியர் யார்?
**"To end a Civil War"**
மார்க் சோல்ட்டர் (**Mark Salter**)

❒ கட்டுநாயக்க விமான நிலையத்தின் தரம் உலகளாவிய ரீதியில் எத்தனையாவதாகக் கணிக்கப்படுகின்றது?
ஆசியாவில் - 5 ஆம் நிலை
மத்திய ஆசியாவில் - 4 ஆம் நிலை

- ❒ த யூரோபியன் குளோபல் பாங்கிங் அன்ட் பினான்ஸ் விருது வழங்கும் நிகழ்வில் 2014 ஆம் ஆண்டின் இலங்கையின் சிறந்த வங்கி எனத் தெரிவு செய்யப்பட்ட வங்கி எது?
  மக்கள் வங்கி

- ❒ சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக் கனவினை நனவாக்கும் இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ள திட்டம் என்ன?
  சௌபாக்கியா

- ❒ இலங்கை மத்திய வங்கியின் கிளை அண்மையில் எங்கு திறந்து வைக்கப்பட்டது?
  கிளிநொச்சி

- ❒ கடந்த வருடம் (2014) இலங்கையின் பொருளாதாரம் எத்தனை வீத வளர்ச்சியை எட்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறி' வித்துள்ளது?
  7.4

- ❒ உலகின் மிகப் பெரிய புத்தர் சிலை இலங்கையில் எங்கே அமைக் கப்பட்டுள்ளது?
  குருநாகல் மாவட்டத்திலுள்ள ரம்படகல வித்யாசாகர விகாரையில்
  67.5 அடி
  இது கற்பாறையில் செதுக்கப்பட்ட சிலையாகும்.

- ❒ இலங்கையில் களைநாசினி ஒன்றினை இறக்குமதி செய்யவோ அல்லது விற்பனை செய்யவோ 22 மே 2015 முதல் ஜனாதிபதியினால் தடை செய்யப்பட்டுள்ள களைநாசினி எது?
  க்லைபொசேட் **(Glyhosate)**
  இவ் நாசினி சிறுநீரக நோய்க்கு காரணமாக இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றது.

- ❒ சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினத்தினை முன்னிட்டு புகைப் பொருளினை விற்பனை செய்யாத வர்த்தகர்கள் கௌரவிக்கப்பட்ட நிகழ்வு இலங்கையில் எங்கு நடைபெற்றது தெரியுமா?
  யாழ்ப்பாணத்தில்

## இலங்கையில் இன்று இவர்கள்...

- அஸ்கிரிய பீடத்தின் புதிய மகாநாயக்கராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தேரர் யார்?
  **வண.கலகம ஸ்ரீ அத்ததர்ஸி தேரர்**

- இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தின் தற்போதைய புதிய தலைவர் யார்?
  **அனுர டி சில்வா (இவர் 2017 ஆம் ஆண்டு வரை தலைவராக இருப்பார்)**

- இலங்கை மெய்வல்லூநர் சங்கத்தின் புதிய தலைவர் யார்?
  **சுகத் திலகரத்ன (முன்னாள் தடகள வீரர்)**

- கட்டார் டோகா விளையாட்டரங்கில் நடைபெற்ற முதலாவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டியில் இலங்கைக்கு தங்கப் பதக்கம் பெற்றுக் கொடுத்த வீராங்கணை யார்?
  **யமானி**

- இலங்கை இராணுவத்தின் தற்போதைய பிரதானி யார்?
  **மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ்**

## உலகை நோக்கிய இம்மாத வலை வீசலில்...

- நேபாள நாட்டில் இடம்பெற்ற பூகம்பத்தினால் எவரெஸ்ட் சிகரம் எவ்வளவு சென்ரி மீற்றர் சுருங்கியது?
  **2.8 சென்ரி மீற்றர்**

- ஆண்களில் நவீன தலைமுடி அலங்காரத்திற்கு அண்மையில் தடை விதித்துள்ள நாடு எது?
  **ஈரான்**

- அண்மையில் பிக்காசோவின் ஓவியம் 179.3 மில்லியன் விலை போனது. அந்த ஓவியம் யாது?
  **அல்ஜீரிய பெண்**

◇ கடலுக்கு அடியில் ரென்னிஸ் மைதானம் அமைப்பதற்கு திட்டமிட்டுள்ள நாடு எது? டுபாய்

◇ பிரித்தானிய இளவரசர் வில்லியம் மற்றும் கேம்பிரிஜ் சீமாட்டி கத்தரீன் தம்பதிக்கு இரண்டாவதாகப் பிறந்த பெண் குழந்தையின் பெயர் என்ன?
சர்லொட் எலிஸபெத் டயானா

◇ பிரிட்டனின் 56 ஆவது பிரதமர் தேர்தலில் மீண்டும் வெற்றியீட்டி இரண்டாவது முறையாகவும் பிரமராகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
டேவிட் கமெரூன்
இவரது கட்சி பழமைவாதக் கட்சி (ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி)
எதிர்க்கட்சித் தலைவர் : எட் மிலிபாண்ட் (தொழில் கட்சி)

◇ துருக்கிய ஜனாதிபதி அண்மையில் காலமானார். அவர் யார்?
கெனன் எவ்ரென் (வயது-97)

◇ அண்மையில் பரிசுத்த பாப்பரசர் சந்தித்த கியூபா நாட்டின் ஜனாதிபதி யார்?
ராவுல் காஸ்ட்ரோ

◇ உலகளாவிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான தரப்படுத்தல் பட்டியலில் முதல் 5 இடங்களைப் பெற்ற ஆசிய பிராந்திய நாடுகள் எவை?
சிங்கப்பூர் (1960 இல் இருந்தே சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது)
கொங்கொங்
தென்கொரியா
ஜப்பான்
தாய்வான்

◇ சீனாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட ஒரு நாட்டின் பிரதமர் அந் நாட்டுப் பிரதமர் லீ கேகியாங் உடன் எடுத்துக்கொண்ட செல்ஃபி படம் உலகின் வல்லமை வாய்ந்தது என பிரபல போர்ப்பஸ் இதழ் புகழ்ந்துள்ளது. அந்தப் பிரதமர் யார்?
பிரதமர் நரேந்திரமோடி

//////////////////////////////////////////////////////////////

◈ உலகின் மிகவும் உயரமானதும், நிலையானதுமான கண்ணாடிப் பாலம் எந்த நாட்டில் திறந்து வைக்கப்படவுள்ளது?
**சீனாவில் (எதிர்வரும் யூலை (2015) மாதம் திறந்து வைக்கப்பட வுள்ளது.**

◈ நாஸாவால் அனுப்பப்பட்ட ஆளில்லா விண்கலம் தனது 11 வருட கால இலக்கை நிறைவு செய்து எரிபொருள் தீர்ந்து போனமையால் கிரகமொன்றுடன் மோதி நொருங்கி விழுந்த விண்கலத்தின் பெயர் என்ன?
**மெசஞ்சர்**

◈ ஏபோலா வைரஸ் நோயினால் இதுவரை எவ்வளவு பேர் பலியாகி உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது?
**11 ஆயிரத்து 5 பேர், 26 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாதிக்கப் பட்டுள்ளனர்.**

◈ உலகில் இந்த வருடத்தில் (2015) சிறந்த விமான நிலையமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள விமான நிலையம் எது?
**டுபாய் பன்னாட்டு விமானம் நிலையம்**

◈ உலகில் முதன் முதலாக செயற்கை விந்து உற்பத்தி செய்து சாதனை படைத்த விஞ்ஞானிகள் எது?
**பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானிகள்**

◈ உலகில் எத்தனை பேருக்கு புகை பிடிக்கும் பழக்கம் இருப்பதாக ஆய்வு கூறுகின்றது?
**100 கோடி**
**இதேவேளை, 24 கோடி பேருக்கு குடிப்பழக்கம் இருப்பதாக அவ் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

◈ மங்கோலியாவின் பொருளாதாரத்திற்கு அண்மையில் உதவி வழங் கிய நாடு எது?
**இந்தியா**

◈ பொது இடத்தில் வைத்து சாவுத் தண்டனை நிறைவேற்றும் நாடு களில் முதலிடம் வகிக்கும் நாடு எது? **சீனா**
**இரண்டாவது - சீனா, மூன்றாவது - சவூதி அரேபியா**

◇ உலகின் குட்டி பேரழகியாகத் தெரிவு செய்யப்பட்ட உக்ரைன் நாட்டின் சிறுமி யார்?
**அன்னா கிரிமோ லெட்ஸ் (வயது-10)**

◇ உலகில் வேலையின்மையில் முதலிடத்தில் உள்ள பிரதேசம் எது?
**காஸா**

## உலகின் இன்றைய நிலையில் இவர்கள்...

◎ தெற்காசிய பரிவர்த்தனை சம்மேளனத்தின் (South Asian Federation of Exchanges) தற்போதைய தலைவர் யார்?
**வஜிர குலதிலக**

◎ சவூதி அரேபியாவில் புதிதாக பதவியேற்றுக் கொண்ட பட்டத்து இளவரசர் யார்?
**சல்மான் பின் அப்துல் அஜீஸ்**

◎ நைஜீரியாவின் புதிய ஜனாதிபதி யார்?
முகம்மது புஹானி

◎ மைசூரின் 27 ஆவது புதிய மன்னர் யார்?
யதுவீரகிருஷ்ணதத்த சாம்ராஜ்

## அயல் நாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

※ நடிகர் சல்மான்கானுக்கு 5 வருட சிறைத்தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதன் காரணம் யாது?
மதுபோதையில் கார் ஓட்டி ஒருவர் உயிரிழக்க காரணமாய் அமைந்தமை.

※ உலகிலேயே முதன் முதலாக கல்லூரி அதிபராக நியமனம் பெற்ற இந்தியாவின் திருநங்கை யார்?
மனாபி பந்தோபாத்யாய் (கொல்கத்தா)

※ "மிஸ் கூலாகமாக" தெரிவு செய்யப்பட்ட திருநங்கை யார்?
பிரவீனா (மதுரை)

# விளையாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

⊙ சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் முதல் 3 இடங்களையும் பெற்ற அணிகள் எவை?
முதலாவது - தென்னாபிரிக்கா
இரண்டாவது - அவுஸ்ரேலியா
மூன்றாவது - நியூஸிலாந்து
இதேவேளை, இலங்கை 7 ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத் தக்கது.

⊙ 2009 ஆண்டு ஹாரீஸ் கிண்ணத்துக்கான போட்டியில் 439 ஓட்டங்கள் பெற்ற சச்சின் டெண்டுல்காரின் சாதனையை தற்போது முறியடித்துள்ள வீரர் யார்?
சர்பராஸ்கான்

⊙ இந்த நூற்றாண்டின் ஈடு இணையற்ற குத்துச்சண்டை போட்டியாகக் கருதப்பட்ட வெல்டர் வெயிட் போட்டி எங்கே நடைபெற்றது?
அமெரிக்காவில்

- அதில் பங்கு கொண்ட வீரர்கள் யார்?
  ஃப்ளாயிட் மோவெதர் (அமெரிக்கா)
  மேனி பேக்கியோ (பிலிப்பைன்ஸ்)
- வெற்றியீட்டிய வீரர் யார்?
  ஃப்ளாயிட் மோவெதர்
- அவருக்கு கிடைத்த பரிசுத் தொகை எவ்வளவு?
  115 கோடி - உலகிலேயே அதிகளவு சம்பளம் வாங்கும் விளையாட்டு வீரர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மேன பேக்கியோவிற்கு 77 கோடி வழங்கப்பட்டது.

⊙ விளையாட்டுப் போட்டியின் போது வீரர்கள் மைதானத்தில் உயிரிழக்கும் சம்பவங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது. அந்த வகையில் ஆடு களத்தில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்த உதைபந்தாட்ட வீரர் யார்?
லோயர் லீக், பெல்ஜியம் , (வயது-23)
இதேவேளை, கடந்த மாதம் (ஏப்ரல்) பிரபல கால்பந்தாட்ட வீரர் கிரிகொரி மெர்டன்ஸ் நெஞ்சு வலி காரணமாக மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

⊙ 2012 ஆம் ஆண்டில் லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் வெற்றியீட்டிய அமெரிக்கரின் வெள்ளிப் பதக்கம் பறிக்கப்பட்டது. அந்த வீரர் யார்?
**தடகள வீரர் டைசன் கே.**

⊙ உதைபந்தாட்டத்தில் அதிக கோல்களை அடித்தவர் என்ற பட்டியலில் முதலிடம் பிடித்துள்ள வீரர் யார்?
**கிறிஸ்டியானோ ரொனால்டோ**

⊙ இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் ஒருவரின் வாழ்க்கை வரலாறு படமாக்கப்பட்டுள்ளது. அந்த வீரர் யார்?
**முகமது அசாருதீன்**

## விருதுகள் பக்கம் வீசிய வலையில்...

❖ 68 ஆவது கேன்ஸ் திரைப்பட விழாவில் விருது வாங்கிய ஒரே இந்தியத் திரைப்படம் எது? **மாஸான்**
அத்துடன், சிறந்த திரைப்படத்துக்கான "தங்கப்பனை" விருது வென்ற திரைப்படம் எது? **தீபன்**

❖ சீனாவில் இடம்பெற்ற உலக சுற்றுலா கண்காட்சியில் "சிறந்த சுற்றுச் சூழல் சுற்றுலாத்தளம்" என்ற விருதினை வென்ற நாடு எது?
**இலங்கை (இலங்கை சுற்றுலாச் சபை)**

---

## ❒ 20 ஆம் சீர் திருத்தத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தேர்தல் முறைகள்

**(வாசகர்களின் நன்மை கருதி அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட 20 ஆம் திருத்தச் சட்டத்தின் சுருக்க வடிவம் கீழே தரப்படுகிறது)**

➤ 20ஆம் சீர்திருத்தத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தேர்தல் முறைமை யாது?

01. பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 255 ஆக அதிகரித்து பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை பலப்படுத்துதல்

02. மூன்று மாதங்களில் அதன் செயற்பாட்டினை நிறைவு செய்யும் எல்லை மீள்நிர்ணய குழுவொன்றை ஸ்தாபித்தல். எல்லை நிர்ணய ஆணைக் குழுவினால் முழுநாட்டையும் 20-25இற்கு இடைப்பட்டதேர்தல் மாவட்டங்களாக பிரித்து, மேலும் அத்தேர்தல் மாவட்டங்களை 3-16 வரையிலான தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டும்.

03. புவியியல், இன விகிதாசாரம், அபிவிருத்தி மட்டம், கலாசார இலட்சணங்கள் மற்றும் வாக்காளர்களின் எண்ணிக்கை என்பன ஆதாரமாகக் கொண்டு தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டும்.

04. சிறுபான்மையின பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் வகையில் பல அங்கத்துவ தொகுதிகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். தனி மற்றும் பல அங்கத்துவ தொகுதிகளிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் 165 பேர் தெரிவு செய்யப்படுவர்.

05. தற்போது இருக்கும் 196 மாவட்ட உறுப்பினர் ஆசனங்கள் விகிதாசார முறையின் கீழ் எல்லா தேர்தல் மாவட்டங்களுக்கும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் பிரிக்கப்படும். அத்துடன் மாவட்டத்துக்கான ஆசனங்கள் விகிதாசார முறையில் பிரிக்கப்படும். ஆன போதும், தேர்தல் தொகுதிகளில் வெற்றி பெறும் 165 பேரும் கட்டாயமாக பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படுவர்.

06. அரசியல் கட்சிகள் வேட்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டும். வேட்பு மனுக்களைக் கையளிக்கும் போது மாவட்ட மட்டத்திற்காக விகிதாசார முறையின் கீழ் நியமிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கையுடன் 3 ஐ கூட்டுவதன் மூலம் கிடைக்கும் எண்ணிக்கைக்குச் சம எண்ணிக்கையான வேட்பாளர்கள் தேர்தல் மாவட்டத்திற்காக பெயர் குறிக்கப்பட வேண்டும். அத்துடன் குறித்ததொரு தேர்தல் தொகுதியில் போட்டியிடாத வேட்பாளரொருவர் கட்சியை ஊக்குவிப்பதற்காக மாவட்ட மட்டத்தில் பிரசாரம் செய்ய முடியும்.

07. பழைய விருப்பு வாக்கு முறைமை மாற்றப்படுவதுடன், தேர்தல் தொகுதியொன்றில் வெற்றி பெறும் வேட்பாளரொருவர் தனது கட்சியைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்த முடியும்.

08. ஏதேனும் ஒரு கட்சி அல்லது குழுவுக்காக விகிதாசார முறைப்படி உரித்தாகும் உறுப்பினர் பதவிகளைப் பார்க்க குறைந்த அளவு வெற்றியெய்தி உள்ள போது அந்தந்த வாக்கெடுப்பு பிரிவுகளுக்காக ஒவ்வொரு கட்சியில் அல்லது குழுவில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்படாத வேட்பாளர்களைத் தமது மாவட்டங்களில் பெற்றுக்கொண்ட வாக்குகளின் சதவீதத்திற்கமைய மேலிலிருந்து

கீழுக்குத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். ஏதேனும் ஒரு கட்சி அல்லது குழுவுக்காக விகிதாசார முறையின் கீழ் உரித்தாகும் அளவைப் பார்க்கக் கூடிய எண்ணிக்கையான உறுப்பினர் பதவிகள் வாக்கெடுப்பு பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டிருப்பின், அவ்வாறு கூடிய உரித்துடைய உறுப்பினர் பதவி எண்ணிக்கையை 255 இல் இருந்து 196 ஐ கழித்தபோது கிடைக்கும் மீதி எண்ணிக்கையான 59 உறுப்பினர் பதவிகளை தேசிய விகிதாசாரத்தின்படி ஒதுக்குவதன் மூலம் (ஆகக் குறைந்தது 1 ஐ பெறுவதன் கீழ்) அந்தந்தக் கட்சிக்கு அல்லது குழுவிற்கு கிடைக்கும் உறுப்பினர் பதவி எண்ணிக்கையிலிருந்து ஒதுக்கப்படும். ஆகையால் தேவைப்படின் தேசியப்பட்டியலுக்காக 59 உறுப்பினர்களைக் குறிக்கலாம்.

09. தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது 29 இல் இருந்து 59 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. விகிதாசார பிரதிநிதித்துவம் முறைமையின் ஊடாக ஆசனங்களைப் பெறாத அதேநேரம் தேர்தல் தொகுதியொன்றை வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கு தேசியப்பட்டியலில் இருந்து ஆசனங்கள் வழங்கப்படும். எஞ்சியிருக்கும் இடங்களானது தற்போது நடைமுறையில் இருக்கும் முறைமையைப் பயன்படுத்தி ஒதுக்கீடு செய்யப்படும்.

10. தேர்தல் தொகுதியில் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் பதவி ஒன்றில் வெற்றிடம் ஏற்படுமிடத்து இடைத்தேர்தலொன்றை நடாத்த வேண்டும்.

11. தேசியப் பட்டியலில் அதிக இடங்கள் இருக்கும் பட்சத்தில் தேசியப் பட்டியலில் இடங்களைத் தக்க வைத்துக் கொள்வதற்குத் தேவையான வாக்குகளின் எண்ணிக்கை குறைக்கப்படும். இது சிறு மற்றும் சிறுபான்மையினக் கட்சிகள் பிரதிநிதித்துவத்தை இழக்காமல் இருப்பதை உறுதிசெய்யும். தற்போது தேசியப் பட்டியலில் இடமொன்றைத் தக்க வைத்துக் கொள்வதற்குத் தேவையான வாக்குகளின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கு அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் 29 ஆல் பிரிக்கப்படுகிறது.
தேசியப் பட்டியலில் இடமொன்றைத் தக்க வைத்துக்கொள்வதற்குத் தேவையான வாக்குகளின் எண்ணிக்கை குறைவடைகின்ற போதிலும், புதிய முறைமையின் பிரகாரம் அந்த எண்ணிக்கையானது 59 ஆல் பிரிக்கப்படும்.

//////////////////////////////////////////////////////////////////////

## சந்தா விபரம் - Delivered to Your Home



உங்கள் சந்தா தொகையை சி.என்.எச்.சாள்ஸ் என்ற பெயரில் யாழ். பிரதம தபாலகத்தில் மாற்றக் கூடியதாக காசுக் கட்டளை (Money Order) அனுப்பப் படுதல் வேண்டும். அல்லது உங்கள் பகுதியில் உள்ள கொமர்ஷல் வங்கியில் C.N.H. Charles, Commercial Bank (Stanley Road,Jaffna) 8127011186 என்ற சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்து வங்கி ரசீதுடன் உங்கள் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன அடங்கிய விண்ணப்பத்தினை எனது முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் எத்தனையாவது இழையிலிருந்து அனுப்ப வேண்டும் என்பதையும் குறிப்பிடுங்கள். இதழின் பிரதிகள் கண்ணியமாக உங்களுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

**வருடச் சந்தா 540/- (தபால் செலவு உட்பட) மட்டுமே.**




## ❒ முதலமைச்சர் ஜெயலலிதா :

※ ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கு எத்தனை ஆண்டு காலம் நடைபெற்றது?
18 ஆண்டுகள்

4 ஆண்டுகள் சிறை, 100 கோடி ரூபா அபராதம் வழங்கி முன்னர் தீர்ப்பளித்த சிறப்பு நீதிமன்ற நீதிபதி யார்? **ஜோன் மைக் டி குன்ஹா**

(இவர் பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதியும் ஆவார்.

※ மேற்படி வழக்கில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் எப்போது விடுதலை செய்யப் பட்டார்? மே 11, 2015

- விடுதலை செய்த நீதிமன்றம் எது? கர்நாடக உயர்நீதிமன்றம்
- நீதிபதி யார்? சீர்.ஆர். குமாரசாமி

※ தமிழக முதல்வராக ஜெயலலிதா எத்தனையாது தடவையாக அண்மையில் பதவியேற்றார்? 5 ஆவது

## வேலைவாய்ப்பு படிவங்கள்

அரச வர்த்தமானியில் வெளிவருகின்ற அனைத்து வேலைவாய்ப்புப் படிவங் களும் என்னால் வெளியிடப்பட்டு வருகின்றன. அதனை யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட குடாநாட்டின் முன்னணி புத்தக நிலையங்களில் மட்டும் பெற்றுக்கொள்ள முடியும்.

**உங்கள் பார்வையில் வலை...**

உங்களது கருத்துக்களை எழுதி, Passport அளவு புகைப்படத்தினையும் இணைத்து அனுப்புங்கள். அவை காலக்கிரமத்தில் வலையில் பிரசுரிக்கப்படும்.

வாழ்க வையகம் - வாழ்க வளமுடன்

தொடர்புக்கு : சி.என்.எச்.சாள்ஸ், 163 செம்மணி வீதி, நல்லூர். தொ.இல : 0776913337
heyncharles@gmail.com